**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**

**CHENGALPATTU**

**MCOP No. 142/2024**

**நாள் – 03.06.2026**

**PW 1 – மகாலட்சுமி**

**(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)**

**குறுக்குவிசாரணை –**

விபத்து சமயத்தில் TN19BY2651 என்ற இருசக்கர வாகனத்தில் சூர்யா என்பவர் திருக்கழுக்குன்றத்திலிருந்து செங்கல்பட்டு நோக்கி ஓட்டி வந்த போது அந்த வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து வந்தேன் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் இரண்டு புறமும் கால்களை போட்டு சாலையைப் பார்த்தவாறு பயணித்தேன். இருசக்கர வாகனம் ஒரு லாரியின் பின்புறத்தில் சென்று மோதியது என்பது தான் வழக்கு என்றால் சரிதான். லாரியின் இடது பின்புறத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு இடதுபுற தோள்பட்டையிலும், இடது புற கண்ணிற்கு மேல் நெற்றியிலும், வலது கால் கீழ் பகுதியில் எலும்பு முறிவும் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மெதுவாக சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்தானது இருசக்கர வாகன ஓட்டுநர் சூர்யாவின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் மருத்துவமனையின் முத்திரையோ, கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.6 ஆவணத்தில் முன்பணம் செலுத்த என்பதில் முத்திரையோ, கையெழுத்தோ இல்லை என்று சொன்னால் சரிதான். ம.த.சா.ஆ.3, ம.த.சா.ஆ.6 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றும், அவை செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.3 மற்றும் ம.த.சா.ஆ.6 ஆகிய ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.9ல் உள்ள 5 ரசீதுகள் எந்த மருத்துவமனையால் வழங்கப்பட்டது என்பதற்கான பெயரோ, முத்திரையோ இல்லை என்று சொன்னால் சரிதான், மருத்துவரின் பெயர்

3/6/26

J. Mahalakshmi
03/06/2026

மட்டும் உள்ளது. ம.த.சா.ஆ.14 மருந்து பில்களுக்கான மருத்துவரின் மருந்து சீட்டுகள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.9 மற்றும் ம.த.சா.ஆ.14 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.9 மற்றும் ம.த.சா.ஆ.14 ஆவணங்களின் உண்மை தன்மையை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது தான் என்றால் சரிதான். ம.த.சா.ஆ.16 காயச்சான்றிதழின் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் வீட்டில் இருக்கிறதா என்று தெரியவில்லை. ம.த.சா.ஆ.16 ஆவணமும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ம.த.சா.ஆ.13 ன் படி விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லை என்றும், அவரது ஓட்டுநர் உரிமம் 22.8.2021 அன்றே காலாவதியாகிவிட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் வாகனம் ஓட்டுவதற்கான முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய கடமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் BCA படித்து வந்தேன். அப்போது நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. நான் தற்சமயம் கல்லூரி முடித்து வேலை தேடி கொண்டு இருக்கிறேன். மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்ட பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதற்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கைக்கு புகார் அளித்தவர் இருசக்கர வாகன ஓட்டுநர் சூர்யாவின் தந்தை. புகாரிலோ, எனது மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்து சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்திற்கு முழு காரணமான சூர்யாவையோ, அவர் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளரையோ, அந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தையோ இம்மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட மூன்று தரப்பினர்களையும் மனுவில் தரப்பினர்களாக

3/6/20

J. Mahalakshmi
03/06/2026

சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கான அனுமதி சீட்டு தொடர்பான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திலிருந்து அனுமதி சீட்டு வழங்கப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது என்றும், அதனை நிரூபிக்காததால் 2ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு தொகை பெறுவதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் முன்பு சென்று கொண்டிருந்த வாகனத்திலிருந்து சட்டப்படியாக இருக்க வேண்டிய பாதுகாப்பு இடைவெளி 10 மீட்டர் தூரத்தை கடைபிடித்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது பின்னால் இருந்து வந்த லாரி எங்களை முந்தி திருப்பத்தில் வளைந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், அந்த வாகனத்திற்கு உரிய அனுமதி சீட்டு இல்லை என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் தான் என்றும், வழக்கிற்காக கொடுங்காயங்கள் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மனுவில் வெவ்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைகள் மனுவிற்காக அதிகப்படுத்தி குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

J. Mahalakshmi
03/06/2026

<u>**மறுவிசாரணை - இல்லை**</u>

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 03.06.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

3/6/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.